031

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை – 2009

**ESP 2317 – ஆசிரியர் கல்வி**

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 13.02.2009 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

ஏதேனும் மூன்று(03) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.

1. (i) 'ஆசிரியர் கல்வி' எனும் பதத்தினை வரையறை செய்க. (06 புள்ளிகள்)

   (ii) (அ) தொடக்கநிலை ஆசிரியர் கல்வி

   (ஆ) தொடருறு ஆசிரியர் கல்வி என்பதனால் நீர் யாது விளங்குகின்றீர் என்பதை பொருத்தமான உதாரணங்கள் காட்டி விளக்குக. (12 புள்ளிகள்)

   (iii) இலங்கையிலுள்ள ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் தரம் மற்றும் விளைத்திறனை பாதிக்கும் மூன்று பிரதான காரணிகளை விமர்சன ரீதியாக ஆய்வு செய்க. (15 புள்ளிகள்)

2. "ஆசிரியர் தொழில்வாண்மை என்பது தேர்ச்சி, செயலாற்றுகை மற்றும் நடத்தை எனும் மூன்று பண்புக்கூறுகளைக் கொண்டது."

   (i) "ஆசிரியர் தொழில்வாண்மைத்துவம்" எனும் எண்ணக்கருவை வரையறை செய்க (06 புள்ளிகள்)

   (ii) மேலுள்ள தொழில்வாண்மையின் மூன்று பண்புக்கூறுகளையும் பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக. (12 புள்ளிகள்)

   (iv) மேலுள்ள பண்புக்கூறுகளை ஆசிரியர்களிடம் விருத்தி செய்வதற்கு இலங்கையிலுள்ள ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் வகிக்கும் வகிபங்கினை ஆராய்க.

3. இலங்கையில் தற்போது ஆசிரியர்களை வெவ்வேறு இடங்களுக்கு நியமித்தல் மற்றும் ஆசிரியர் இடமாற்றக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில், பாடசாலைகளில் விளைத்திறனில் உடன்பாடானதும் எதிர்மாறானதுமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

   (i) இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் ஆசிரியர்களை வெவ்வேறு இடங்களில் நியமித்தல் மற்றும் ஆசிரியர் இடமாற்றங்கள் கொள்கைகளை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

   (ii) இக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

   (iii) நீங்கள் இனங்கண்ட பிரச்சினைகளை இழிவளவாக்கிக் கொள்வதற்கான பொருத்தமான தந்திரோபாயங்களை முன்வைக்க. (15 புள்ளிகள்)

OPEN UNIVERSITY OF SRI LANKA
LIBRARY

4. "ஆசிரியர்களின் தொழில் வாண்மையில் உன்னதத்தை ஏற்படுத்தி அவர்களது சிறந்த நடத்தையை வழிப்படுத்துவதே ஆசிரியர்களுக்கான 'ஒழுக்கக்கோவையை' விருத்தி செய்வதன் நோக்கமாகும்."

(i) இலங்கையிலுள்ள ஆசிரியர்களுக்கான 'ஒழுக்கக்கோவை' ஒன்றினை அறிமுகப்படுத்துவதற்கான தேவையினை விளக்குக (08 புள்ளிகள்)

(ii) ஆசிரியர்களின் தொழில்வாண்மையின் உன்னதத்தையும் உயரிய நடத்தையும் உட்புகுத்துவதற்கும், 'ஒழுக்கக்கோவை' ஒன்றினை அபிவிருத்தி செய்கையில் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஐந்து(05) அம்சங்களை சுருக்கமாக குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

(iii) அவற்றிலிருந்து மூன்று(03) அம்சங்களைத் தெரிவுசெய்து அவை ஒவ்வொன்றையும் விளக்குக. (15 புள்ளிகள்)

5. (i) 'ஆசிரியர் வலுவூட்டல் (emprowerment) எனும் எண்ணக்கருவை வரையறை செய்க. (10 புள்ளிகள்)

(ii) இலங்கையிலுள்ள ஆசிரியர்கள் தமது கல்விசார் பணிகளை (tasks) விளைதிறனுடைய முறையில் நிறைவேற்றுவதற்கு எந்தளவு வலுவூட்டப்படுகின்றனர் என்பதை விளக்குக. தேவையான இடங்களில் உதாரணங்கள் தருக. (10 புள்ளிகள்)

(iii) இலங்கையிலுள்ள ஆசிரியர்களை வலுவூட்டுவதற்கு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் எவ்வாறு பங்களிப்பு செய்யலாம் என்பதை பரீட்சிக்க. (13 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றுக்கு(03) கருத்துரைக்க.

(i) இலங்கையிலுள்ள பல்வேறு நிருவனங்களினால் வழங்கப்படும் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் தர உறுதிப்பாடு மற்றும் நியமப்படுத்தலுக்குமான அவசியம்.

(ii) இலங்கையிலுள்ள ஆசிரியர் விருத்திக்கு பாடசாலை அடிப்படையிலான தொழில்சார் உதவி வழங்கும் முறைமை (On-site School Based Support System) இன் அறிமுகப்படுத்துவதன் தேவை.

(iii) 1995 இல் உருவாக்கப்பட்ட 'ஆசிரியர் சேவையின்'(SLTS) முக்கியத்துவம்

(iv) ஆசிரியர்கட்கு செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டத்தினை(Performance Appraisal) அமுல்படுத்துவதன் அவசியம்.

(11 × 3 = 33 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)